### மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த – டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாடு விவசாயிகள் நாக்பூரில் கைது!

# ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிப்பதா?

## வலைதளப் பதிவில் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



**சென்னை, ஆக.4-**

**மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த - டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகள் நாக்பூரில் மகராஷ்டிர அரசால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார்.**

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவதற்காக ரயிலில் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகளை நாக்பூரில் கைது செய்துள்ள மகாராஷ்டிரா மாநில காவல்துறையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மேகதாது விஷயத்தில் தொடக்கம் முதலே கர்நாடகாவுக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாகச் செயல்படும் நீர்வளத் துறையின் போக்கை கண்டித்துதான் தமிழ்நாட்டு விவசாயிகள் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தனர்.

ஆனால், அவர்கள் ரயிலில் சென்று கொண்டிருக்கும் போதே நடுவழியில் இறங்க வைத்து, தமிழ்நாட்டுக்கே திரும்பிச் செல்லுங்கள் எனக் கட்டாயப்படுத்தி உள்ளது மகாராஷ்டிர காவல்துறை.

நாக்பூரில் கைது செய்யப்பட்டுள்ள நம் விவசாயிகளை உடனே விடுவிக்க தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம் விவசாயிகளைக் கைது செய்த மகாராஷ்டிர அரசிடம் அதற்கான விளக்கத்தைக் கேட்பதுடன், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கானஉறுதியைப்பெறவேண்டும்.

டெல்லி சென்று போராட அவர்களை ஒன்றிய அரசு அனுமதிக்க வேண்டும்.

ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

# நாக்பூரில் தமிழ்நாடு விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்கு கடும் கண்டனம்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!



சென்னை, ஆக.4-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம் எச் ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

மேகதாது அணை கட்டுமானத்திற்குக் கண்டனம் தெரிவித்து டெல்லியில் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகள் மராட்டிய மாநிலம் நாக்பூரில் அம்மாநில காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். ரயிலில் பயணம் செய்த விவசாயிகளை நடுவழியில் இறங்கச் செய்து திருப்பிச் செல்லுமாறு கட்டாயப்படுத்தி இருக்கின்றனர்.

தங்களது வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் நோக்கில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்காக சென்ற தமிழ்நாட்டு விவசாயிகளை மராட்டிய மாநில பாஜக அரசின் காவல்துறை தடுத்து நிறுத்தி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

ஒன்றிய அரசின் நீர்வளத் துறையின் செயல்பாடுகள் தொடர்ச்சியாக கர்நாடக அரசுக்கு சாதகமாக இருந்து வரும் நிலையில் தங்களது உரிமைகளை நிலைநாட்ட போராட்டத்திற்கு செல்லும் நிலைக்கு தமிழ்நாட்டின் விவசாயிகள் தள்ளப்பட்டனர். அவர்களின் போராட்ட உணர்வு என்பது இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமையின் அடிப்படையானது.

விவசாயிகளின் உரிமை போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது கடும் கண்டனத்துக்குரியது. தமிழ்நாட்டின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்படுவதை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்நாடு அரசு மராட்டிய மாநில அரசிடம் இது குறித்து விளக்கம் கேட்க வேண்டும். காவேரி மேகதாது பிரச்சனையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சாவூர் அருகே கள்ளபெரம்பூரில் 642 ஏக்கர் பரப்பளவு கொண்ட

# செங்கழுநீர் ஏரி தூர்வாரும் பணிக்கு நிதி ஒதுக்க ஒன்றிய அரசிடம் வலியுறுத்துவோம்!

## தஞ்சையில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. – ச.முரசொலி எம்.பி. பேட்டி!

தஞ்சாவூர் ஆக.4.

தஞ்சாவூர் அருகே கள்ளப்பெரம்பூரில் 639.90 ஏக்கர் பரப்பளவு கொண்ட செங்கழுநீர் ஏரியை தூர்வாரும் பணிக்கு ஒன்றிய அரசிடமிருந்து நிதி பெற்று தருவதாக மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் அருகே கள்ளப்பெரம்பூரில் 639.90 ஏக்கர் பரப்பளவு கொண்ட செங்கழுநீர் ஏரியின் இருபுற கரைகள் 8 கி.மீட்டர் தூரத்துக்கு அமைத்து, தூர்வாரும் பணியை அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள், ஊர் பொதுமக்கள் இணைந்து நன்கொடை பெற்று கடந்த 15 நாட்களுக்கு முன்பு பணியை தொடங்கினர்.

இளைஞர்களின் முயற்சியை அறிந்த மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி ஆகியோர் அப்பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அப்போது அப்பகுதி மக்கள் கூறியதாவது சோழர்கள் காலத்தில் ஏரி, குளங்களை வெட்டி பாசன முறையை மக்களிடம் கொண்டு வந்தனர். அதன்படி தஞ்சாவூருக்கும் பூதலூருக்கும் இடையே கள்ளபெரம்பூரில் 639.90 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய ஏரியை வெட்டினர். இந்த ஏரி மூலம் கள்ளபெரம்பூர், ராயந்தூர், தென்னங்குடி, பிள்ளையார்நத்தம், சீராளூர், சக்கரசாமந்தரம், வடகால் ஆகிய கிராமங்களில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நேரடியாகவும், 2 ஆயிரம் ஏக்கர் மறைமுகமாகவும் விவசாயம் செய்யப்பட்டது. இந்த ஏரியில் தண்ணீரை முழுமையாக தேக்கினால் 1.50 டிஎம்சி நீர் தேக்கி வைக்கலாம்.

இந்நிலையில் ஏரியின் இருபுறம் மட்டுமே கரைகள் உள்ளதாலும், மற்ற இருபுறங்களில் கரைகள் இல்லாமல் இருப்பதால் முழுமையாக தண்ணீர் தேக்கி வைக்க முடியவில்லை. அதே போல் 200 ஏக்கரில் மட்டுமே தண்ணீர் தேக்கி வைக்க முடிகிறது. மீதமுள்ள பகுதிகளில் சீமைகருவேல மரங்கள், காட்டாமணக்கு செடிகள் ஆகியவை படர்ந்து காணப்படுகிறது. இதனை சீர் செய்ய வேண்டும் என்றும் தற்போது தனி நபர்களின் நன்கொடையோடு பணி நடைபெறுகிறது. இப்பணிக்கு அரசு உதவி தேவை என கூறினர். மேலும் தூர் வாரும் பணிக்கு ச.முரசொலி எம்.பி ஒரு லட்சம் ரூபாயும், துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ ஐம்பது ஆயிரமும் தங்களது சொந்த பணத்தை வழங்கினர்.

மக்களின் கோரிக்கையினை ஏற்று ஏரிக்குள் சென்று கரை அமைக்கும் பணியை நேரில் பார்வையிட்டனர்.

இது குறித்து மாநிலங்களை உறுப்பினர் எஸ்.கல்யாண சுந்தரம் அளித்த பேட்டியில் கூறியதாவது, தற்போது போதிய தண்ணீர் இல்லாமல் வறட்சி நிலவும் நிலையில் , 600 ஏக்கர் பரப்பளவு கொண்ட கள்ளபெரம்பூர் ஏரியை முழுமையாக தூர்வார சுமார் 200 கோடிக்கும் மேல் தேவைப்படும். ஒன்றிய அரசு நிதி ஒதுக்கிட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இணைந்து கவண ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவர உள்ளோம் என்றார். மேலும் சி.எஸ்.ஆர் நிதியும் பெற்று தருகிறோம் என்று கூறினார்.

இந்த நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், உள்ளிட்ட செங்கழுநீர் ஏரி சீரமைப்பு குழு சீரமைப்பு குழுவினர் மற்றும் கிராம பொது மக்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் அருகே கள்ளப்பெரம்பூரில் 639.90 ஏக்கர் பரப்பளவு கொண்ட செங்கழுநீர் ஏரியின் இருபுற கரைகள் 8 கி.மீட்டர் தூரத்துக்கு அமைத்து, தூர்வாரும் பணியை மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், செங்கழுநீர் ஏரி சீரமைப்பு குழு சீரமைப்பு குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் உள்ளனர்.

### கவியரங்கத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்! முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் எழுச்சிக் கவியரங்கம்!

## தலைமை – கே.கே.செல்லபாண்டியன்! எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் – கவிச்சுடர் கவிதைப் பித்தன் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஆக.4

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் எழுச்சிக் கவியரங்கம் நாளை (5.8.2026 புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் எம்.ஏ. கிராண்ட் ஏ.சி. மஹாலில் நடைபெறுகிறது.

கவியரங்கம் நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ.மரிய எட்வின் வரவேற்புக் கவிதை வாசிக்கிறார்.

தி.மு.கழக மாநில இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் அரிமா நா.சந்திரபாபு கவியரங்கத்தை தொடங்கி வைக்கிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் கவியரங்கத்தை தலைமை யேற்று நடத்துகிறார்.

கலைஞரின் எழுதுகோல் எனும் தலைப்பில் கவிஞர் வீ.ம. இளங்கோவனும் அம்பேத்கரின் துலாக் கோல் எனும் தலைப்பில் கவிஞர் இரா.தனிக்கொடியும் அண்ணாவின் அளவுகோல் எனும் தலைப்பில் கவிஞர் அறந்தாங்கி வெங்கடேசனும் பாவேந்தரின் திறவுகோல் எனும் தலைப்பில் கவிஞர் வல்லம் தாஜ்பாலும் திருவள்ளுவரின் செங்கோல் எனும் தலைப்பில் கவிஞர் தஞ்சை இராகவ் மகேஷும் பெரியாரின் ஊன்றுகோல் எனும் தலைப்பில் கவிஞர் நஜ்முதீனும் கவி பாடுகின்றனர்.

கவியரங்க நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக இலக்கிய அணி செயலாளர் வி.என்.எம்.பாலு வரவேற்புரை ஆற்றுகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் சிவ.வீ. மெய்ய நாதன் எம்.எல்.ஏ., டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. எம்.எம்.அப்துல்லா, கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, மாவட்ட அளவைத் தலைவர் அரு. வீரமணி, மாநகரச் செயலாளர் வே.ராஜேஷ் ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கின்றனர்.

நிறைவாக புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் மணிமொழி மனோகரன் நன்றி கூறுகிறார்.

### தகவல் தொழில்நுட்பத் துறையில், செயற்கை நுண்ணறிவின் தாக்கத்தால்,

# வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும் சூழலைக் கட்டுப்படுத்த, நடவடிக்கைகள் உள்ளனவா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 30.07.2026 அன்று மாநிலங்களவையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் செயற்கை நுண்ணறி வின் தாக்கத்தால் வேலை வாய்ப்பின்மை பெருக்கும் அபாயத்தை கட்டுப்படுத்த, ஒன்றிய அரசிடம் ஏதேனும் நடவடிக்கைகள் உள்ளனவா? என்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தால் வேலை வாய்ப்புகள் பெருகிட வாய்ப்பு உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்; துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலே அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்; துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஜனவரி 2025ல் வெளியிடப்பட்ட பணியாளர்கள் ஆய்வறிக்கையின்படி 15 வயதிற்கும் மேற்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 57 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும், வேலை வாய்ப்பின்மை 3 சதவீதமாக குறைந்துள்ளது என்றும், 27 முக்கிய தொழிற்சாலைகளில், 64 கோடி பணியாளர்கள் வேலை செய்து வருவதாகவும், செயற்கை நுண்ணறிவை முறையாக பயன்படுத்தினால் இளைஞர்களிடையே வேலை வாய்ப்புகளை பெருக்க சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும்,

30,000 கோடி அமெரிக்க டாலர்கள் அளவிற்கு தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சி அடைந்துள்ளது என்றும், அறிவு சார்ந்த கட்டமைப்புகளை பெருக்குவது இந்தியப் பொருளாதாரத்தை உலக அரங்கில் மேம்படச் செய்வதற்கு அவசியம் என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

எதிர்காலத் திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம், 34 இலட்சம் இளைஞர்களுக்கு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும்,

தேசிய மின்னணுவியல் நிறுவனத்தின் உதவியுடன், சைபர் பாதுகாப்பு போன்ற 43 இலட்சத்திற்கும் அதிகமானோர் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்றும், ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்; துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலே அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் கடலோர பயணிகள்

# படகுப் போக்குவரத்து குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4-

தமிழ்நாட்டில் கடலோர பயணிகள் படகுப் போக்குவரத்து குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ஆம் எனில் விவரம் என்ன? என்று மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கடலோர பயணிகள் போக்குவரத்து, படகு சேவைகள் மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மத்திய அரசு ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா?

அவ்வாறு ஆய்வு மேற்கொண்டிருந்தால், அதன் விவரங்கள், இடங்களை அடையாளம் காண மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் மாநிலத்தில் கடலோர மற்றும் உள்நாட்டு நீர்வழி இணைப்பை மேம்படுத்த வழங்கப்பட்ட பரிந்துரைகள் என்ன?

மாநிலத்தில் புதிய கடலோர பயணிகள் படகு வழித்தடங்கள், நவீன படகு முனையங்கள் மற்றும் பல்வகை போக்குவரத்து (Multimodal) உள்கட்டமைப்புகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளதா? அவ்வாறு இருந்தால், மாவட்ட வாரியான விவரங்கள் என்ன?

இத்திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் பாதுகாப்பான, மலிவு விலை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் வழிப் போக்குவரத்து, சுற்றுலா மற்றும் வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அவ்வாறு இருந்தால் அதன் விவரங்கள் என்ன? என மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இதற்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்த சோனோவால் அளித்த பதில் வருமாறு:

இந்திய அரசால் இது போன்ற எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் சாகர்மாலா (Sagarmala) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் ரூ. 42 கோடி மதிப்பில் பின்வரும் 4 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன:

நாகப்பட்டினம் துறைமுகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், நாகப்பட்டினம் (இந்தியா) - காங்கேசன்துறை (இலங்கை) பயணிகள் படகு சேவைக்காக.

அக்னி தீர்த்தம் பகுதியில் சுற்றுலாப் படகுகள் நிறுத்தும் (Berthing) வசதிகளை உருவாக்குதல்.

மண்டபம் - பாம்பன் அணுகுமுகப் பகுதியில் சுற்றுலாப் படகுகளுக்கான கூடுதல் நிறுத்தும் வசதிகளை அமைத்தல்.

கன்னியாகுமரியில் பயணிகள் ஜெட்டி (Passenger Jetty) அமைத்தல்.

தமிழ்நாட்டில் உள்ள 5 தேசிய நீர்வழிகளில் சரக்கு போக்குவரத்து மற்றும் நதி சார் சுற்றுலா மேம்பாட்டிற்காகத் திட்ட மிடப்பட்டுள்ளன என அமைச்சர் பதிலளித்தார்.

### தமிழ்நாட்டில்

# அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – காஞ்சிபுரம் க.செல்வம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4 -

தமிழ்நாட்டில் அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கைகள் அரசு எடுக்குமா என்று மக்களவையில் காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் க.செல்வம் கேள்வி எழுப்பினார்.

இக் கேள்விக்கு பதிலளித்த ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஜன ஔஷதி மையங்களில் அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் இலவச மருந்து சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், மருந்துகளின் கொள்முதல், தரப் பரிசோதனை, இருப்பு மற்றும் விநியோகம் ஆகியவை தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

ஜனஔஷதி மையங்களில் அத்தியாவசிய மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்ய இருப்பு கண்காணிப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன், சேவை குறைவாக உள்ள பகுதிகளிலும் புதிய மையங்கள் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாடு முழுவதும் 25,000 ஜனஔஷதி மையங்கள் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.